R4770

## WHAT "CORRUPT COMMUNICATION" SIGNIFIES

## "கெட்ட வார்த்தை" எதை அடையாளப்படுத்துகிறது

"கெட்ட வார்த்தை உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கும் பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள் ." எபேசியர் 4:29

கெட்ட வார்த்தை என்பது நல்லவைகளுக்கு பதிலாக தீமையான செய்தியை பரப்புவதாக இருக்கிறது. சாதாரண உரையாடலின்படி நமது வசனம் ஒரு கெட்ட வார்த்தையை அர்த்தப்படுத்துகிறது. நமக்கு அவைகளின் மேல் கட்டுப்பாடும் குறிப்பிட்ட எல்லைகளும் இல்லாதிருந்தால் நமக்கும் மற்றவர்களுக்கும் எல்லா வகையான கஷ்டங்களையும் நமது மனது கொண்டு வந்துவிடும். ஆனால் நமது நாவுகள் நமது மனதைக் காட்டிலும் இன்னும் அதிகமான தீமையை செய்யும். நமக்கு மட்டுமே தீமை என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பவைகள், நமது நாவுகள் காரியத்துக்குள் வந்தால் நமது மனது மட்டும் தீட்டுப்படுத்தப்படாமல், அது தொற்றாகி பெரும் வெறுப்புக்கு ஆளாகும். ஏனெனில் நாவானது காரியத்தை எல்லா இடங்களுக்கும் பரப்பும், காரியம் உண்மையானதோ அல்லது பொய்யானதோ, அது நேர்மையற்றதாக , அவமதிக்கிறதாக, தொடர்ந்து செல்வதாக சில சமயங்களில் அழியாமல் தொடர்ந்து செல்வதாக இருக்கும்.

உலக ஜனங்களிடையே மாத்திரமல்ல, கர்த்தருடைய ஜனங்களிடையேயும் சிறிய காரியங்களோடு அல்லது சிறிய கருத்துக்களோடு தொடர்புபடுத்தவும் ஒரு போக்கு இருக்கிறது. அது பாவத்திற்குரியதான அவசியம் இல்லாதிருந்தாலும் தீமையானது முளைத்து அபிவிருத்தி அடைய காரணமாக இருக்கலாம். இந்த கருத்தில் தான் கெட்ட வார்த்தை நமது வாயிலிருந்து புறப்பட வேண்டாம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். துரதிஷ்டவசமாக கெட்ட செய்தி நம்மிடம் வந்தால் மேலும் அது செல்லாதபடிக்கு நாம் பார்க்க வேண்டும். மற்றவர்களுக்கு தீமையாக நாவுகளை பயன்படுத்துவது சுபாவ மனிதன் குணமா அல்லது கெட்ட ஆவிகளின் வேலையா என்று சில சமயங்களில் ஆச்சரியப்படுவோம்.

அப்போஸ்தலர் கட்டளையிடுவது போல நாம் தீய தொடர்புகளை விட்டு விடுவோமாக; தவிர்ப்போமாக; மேம்படுத்தக்கூடியதை மட்டுமே பற்றிக் கொள்ளுவோமாக. மேம்படுத்தக்கூடியது என்பது கட்டுகிற, ஒருவரையொருவர் கட்டி எழுப்புகிற என்ற கருத்தில் சொல்லப்படுகிறது.

### தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தை பற்றிய உரையாடல் பரந்த நோக்கம்

கர்த்தரை நேசித்து அவரது அடிச்சுவட்டில் நடக்க முயற்சிப்பதாக கூறுகிறவர்கள் சொல்லுவதாவது: "நான் சத்தியத்தை தவிர எதையும் பேசமாட்டேன்; யாருக்கும் தீமை செய்யமாட்டேன்; அண்டை வீட்டார் உள்ளே வரும் போது நான் எதாவது பேச விரும்பி, மத காரியங்களில் அவர்களுக்கு ஆவல் எற்படுத்த பேசினால் அது அலுப்பாக இருக்கிறது என்று நினைப்பார்கள்." ஆனால் அவதூறு பேசுவதும் தீமை பேசுவதும் ஒன்றுதான். ஆனால் புரளி பரப்புபவர்கள் சாதுரியமான முறைகளையும், வார்த்தைகளையும் பயன்படுத்துவார்கள்; கேட்கிறவர்களுக்கு கருணை காட்டுவது போல பேசுவார்கள். ஆனால் அது தீமை பயக்கும். கேட்பவர் விழுந்து போன மானிட சுபாவத்தின் சக்தியினால் வெளியே சென்று இந்த அவதூறை மற்றவர்களுக்கு சொல்ல தூண்டப்படுவார்கள். விழுந்துபோன சுபாவம் இப்படிப்பட்ட காரியங்களில் விருந்துண்டு களிப்படைகிறது. இப்படியாக அறநெறியையும் பாவத்திற்கு எதிராக போதிக்கிற அநேகரையும் ஏமாற்றுகிறது. இப்படியாக மற்றவர்களின் மீறுதல்களை மறைமுகமாக கண்டனம் பண்ணுகிறார்கள். அவர்களே வெறுக்கத்தக்க காரியங்களையும் குறிப்பிடுகிறார்கள். ஐயோ! அவர்களது விளக்கம் ஆபத்தான குறைபாடுள்ளதாக இருக்கிறது. அப்பொழுது கர்த்தருடைய நீதியான ஆலோசனை அசட்டை பண்ணப்படுகிறது.

தெய்வீக வார்த்தையில் தெரிவிக்கப்பட்டுள்ள நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தைக் குறித்து கிறிஸ்தவ ஜனங்களிடையே உரையாடுவது பரந்த நோக்கம் உடையதாக இருக்கிறது. இவைகளில் உண்மையிலேயே கேட்கிறவர்களுக்குமாத்திரமல்ல ஊழியம் செய்கிறவர்களுக்கும் கிருபை சேருகிறது. புது சிருஷ்டியைப் பொருத்தவரை எல்லா வகைகளிலும் அது ஆசீர்வாதத்தை பொழிகிறது. மேலும் பழைய சுபாவத்தின் தீய ஆசைகள், சுவைகள் மற்றும் ஆவல்களை அழிப்பதற்கு உதவுகிறது.

அப்போஸ்தலர், "கர்த்தருடைய ஜனங்கள் தங்களை அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டும்" என்று சொன்ன பொழுது அவர் தனது மனதில் இதைத்தான் வைத்திருந்தார் என்பது தெளிவாகிறது. அன்பின் ஆவி, தேவனுடைய ஆவி, சத்திய ஆவி ஆகியவை நிரம்பி வழிகிற இருதயம் அதை மற்றவர்களுக்கும் கொடுப்பது நிச்சயம். ஏனெனில், "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்;" "இருதயத்தில் சுத்தமுள்ளவர் பாக்கியவான்கள்." (1பேதுரு 2:9; மத்தேயு 12:34; 5:8)